# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,657 — 1959 ජනවාරි 31 වැනි සෙනසුරාදා — 31.1.1959

11,657 ம் இலக்கம்— 1959 ம் ஆண்டு தை மாதம் 31 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளத் தீர்ப்புச் சங்கச் சட்டம்

### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளத் தீர்ப்புச் சங்கச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம் இயந்திரத் தொழிற் சம்பளத் தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, இதனைகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிவிக்கப் படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் முதலாந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

கொழும்பு,
1959 ம் ஞூ ஜனவரிமீ 30 ந் உ.

சீ. பீ. குமாரசிங்ஹ,
தொழில், வீடமைப்பு, சமூக சேவை மந்திரி காரியாலயப் பதில் நிரந்தரக் காரியதரிசி.

### அட்டவணை

இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 10 ந் தேதி வெளிவந்த 9,447 ம் இலக்க " கஸெற் "றில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 22 ந் தேதி வெளிவந்த 9,523 ம் இலக்க " கஸெற் "றிலும், 1948 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் தேதி வெளிவந்த 9,837 ம் இலக்க " கஸெற் " றிலும், 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,229 ம் இலக்க விசேட " கஸெற் "றிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 10,542 ம் இலக்க விசேட " கஸெற் "றிலும், 1955 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10,811 ம் இலக்க விசேட " கஸெற் "றிலும், 1957 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ந் தேதி வெளிவந்த 11,224 ம் இலக்க " கஸெற் "றிலும், 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ந் தேதி வெளிவந்த 11,268 ம் இலக்க " கஸெற் "றிலும், 1958 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 11,509 ம் இலக்க விசேட " கஸெற் " றிலும், 1958 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 11,603 ம் இலக்க " கஸெற்"றிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப் பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

(1) " யாதாயினுமொரு மாதத்தில் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணம் " என்ற தலைப்பின்கீழ்—
(1) (*a*) என்னும் உபதலைப்பின்கீழ் உள்ள பாகத்தில்—

(அ) " 1.00 " என்ற எண்களுக்குப் பதிலாக, " 1.10 " என்ற எண்களை இட்டும் ;

(ஆ) " 1.10 " என்ற எண்களுக்குப் பதிலாக, " 1.20 " என்ற எண்களை இட்டும் ;

(2) அப்பாகத்தின் 3 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட கட்டளைகளை இயைபு படுத்திக் காட்டும் அட்டவணைகளுக்குப் பதிலாக, பின்வரும் புதிய சூசிகளை இட்டும் :—

### I ம் சூசி

#### வாழ்க்கைச் செலவுப்புள்ளி அதிகரிப்பின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | தேர்ச்சியற்ற தொழிலாளிகள் | அரைத் தேர்ச்சிபெற்ற தொழிலாளிகள், I ம், II ம் இனங்கள், கண்காணிமாரும் காவலாளரு முட்பட்ட தேர்ச்சிபெற்ற வேலையாளர் ஆகியோர் | தொழில் கற்போரும் பயிலுவோரும் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 ம் வருடம் | 2 ம் வருடம் | 3 ம் வருடம் | 4 ம் வருடம் |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 100.1—101.8 | 2.0 | 2.10 | 1.10 | 1.20 | 1.48 | 1.63 |
| 101.9—103.6 | 2.3 | 2.13 | 1.11 | 1.21 | 1.50 | 1.65 |
| 103.7—105.4 | 2.6 | 2.16 | 1.12 | 1.22 | 1.52 | 1.67 |
| 105.5—107.2 | 2.9 | 2.19 | 1.13 | 1.23 | 1.54 | 1.69 |
| 107.3—109.0 | 2.12 | 2.22 | 1.14 | 1.24 | 1.56 | 1.71 |

## II ம் சூசி

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறையின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | தேர்ச்சியற்ற தொழிலாளிகள் | அரைத் தேர்ச்சிபெற்ற தொழிலாளிகள், I ம், II ம் இனங்கள், கண்காணிமாரும் காவலாளருமுட்பட்ட தேர்ச்சிபெற்ற வேலையாளர் ஆகியோர் | தொழில் கற்போரும் பயிலுவோரும் 1 ம் வருடம் | 2 ம் வருடம் | 3 ம் வருடம் | 4 ம் வருடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 100.0—98.3 | 1.97 | 2.7 | 1.9 | 1.19 | 1.46 | 1.61 |
| 98.2—96.5 | 1.94 | 2.4 | 1.8 | 1.18 | 1.44 | 1.59 |
| 96.4—94.7 | 1.91 | 2.1 | 1.7 | 1.17 | 1.42 | 1.57 |
| 94.6—92.9 | 1.88 | 1.98 | 1.6 | 1.16 | 1.40 | 1.55 |
| 92.8—91.1 | 1.85 | 1.95 | 1.5 | 1.15 | 1.38 | 1.53 |

இவ்வட்டவணையில் " வருடம் " என்னும் சொல் எவராயினுமொரு தொழில் கற்போரை அல்லது பயிலுவோரைக் குறித்து, 365 தொடர்ச்சியான வேலைநாட்களைக் கொண்டதெனக் கருதப்படும். பின்வருவனவற்றையும் அது உட்படுத்தும்—

(*a*) வேலைகொடுப்பவர் 25 ம் பிரிவின்படி அத்தகைய தொழில் கற்போருக்கு அல்லது பயிலுவோருக்கு அனுமதிக்கும் விடுதலை நாள் ஒவ்வொன்றும் ;

(*b*) வேலைகொடுப்பவரின் அங்கீகாரத்துடன் வேலைக்கு வராதிருக்கும் நாள் ஒவ்வொன்றும் ;

(*c*) தமது வேலைகாரணமாயும் தாம் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுதும் ஏற்படும் ஒரு விபத்தின் காரணமாக, அத்தகைய தொழில் கற்போருக்கு அல்லது பயிலுவோருக்கு நேரும் காயத்தின்பொருட்டு வேலைக்கு வராதிருக்கும் நாள் ஒவ்வொன்றும் ;

(*d*) (117 ம் அத்தியாயம்) தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின் பயனாக ஏற்படும் யாதாயினுமொரு நோய் காரணமாக வேலைக்கு வராதிருக்கும் நாள் ஒவ்வொன்றும் ;

(*e*) வேலைகொடுப்பவர் அத்தகைய தொழில் கற்போருக்கு அல்லது பயிலுவோருக்கு வேலை கொடுக்கத்தவறும் நாள் ஒவ்வொன்றும் ;

ஆனால், 24 ம் பிரிவின்படி வாராந்தர விடுதலைநாளாக நியமிக்கப்பட்ட நாளை உட்படுத்தாது.

ஆயினும், மேற்கூறிய (*a*) ம், (*b*) ம், (*c*) ம், (*d*) ம், (*e*) ம் சரத்துக்களின்படி உட்படுத்தப்பட்ட நாட்களின் மொத்தத் தொகை எவ்வருடத்திலாயினும் 77 க்கு மேற்படலாகாது".

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.